Registered as a NewsPaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 25 வியாழக்கிழமை (11-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 300

## வன்னியில் படையினர் நிலைகள் மீது தொடர்ந்து மோட்டார் தாக்குதல்கள்!

### முறியடித்து விட்டதாக அரச தரப்பு அறிவிப்பு

கொழும்பு, நவ 11

வன்னிப் பகுதியில் புளியங்குளம் நெடுஞ் சாலையின் கிழக்கு, மேற்குப் புறங்களில் படையினர் தொடர்ந்தும் செயற்பட்டு வருவ தாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

நேற்று மாலை விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தொடர்ச்சியான மோட்டார்த் தாக்குதல்களை அங்குள்ள படையினர் எதிர் கொள்ள வேண்டி ஏற்பட்டதாகவும்—

எனினும் படையினரும் பதில் தாக்குதல் களை நடத்தி விடுதலைப் புலிகளின் தாக்கு தல்களை முறியடித்துவிட்டனர் எனவும்—

படையினர் புதிதாக அமைத்த பாது காப்பு நிலைகளை மேலும் பலப்படுத்தி வரு கின்றனர் எனவும் — பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(இ-7)

புலிகளுடன் பேசுவதே ஒரேவழி:

## சமாதானத்துக்கான யுத்தம் தோல்வியில்!

### ரணில் கூறுகிறார்

கொழும்பு, நவ. 11

சமாதானத்துக்கான யுத்தம் என்ற போர்வையில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துவிட்டன. எனவே உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனத்துக்குத் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை அரசியல் நோக்கங்களுக்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 98 அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியது

கொழும்பு, நவ 11

அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 98 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று நிறைவேறியது.

பிரேரணைக்கு ஆதரவாக 106பேரும், எதிராக 8 பேரும் வாக்களித்தனர்.

ஈ. பி. டி. பி. மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாகவும் தமி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பதற்ற நிலை மக்கள் வெளியேறுகின்றனர்

### கடைகள், வங்கிகள் மூடப்பட்டன

வவுனியா, நவம்பர் 11

வவுனியா நகரப் பகுதியில் வசிக்கும் மக்கள் நேற்றுப் பிற்பகல் முதல் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. நகரப் பகுதி எங்கும் நேற்று முழுநாளும் பதற்ற நிலை காணப்பட்டது,

வங்கிகள், அலுவலகங்கள் என்பன பிற்பகலுடனேயே மூடப்பட்டன. ஊழியர்கள் அவசர அவசரமாக வெளியேறினர். காலையில் பாடசாலைக்குச்சென்ற மாணவர்கள் இடையிலேயேவீடுகளுக்குத்திரும்பினர்.

வழமையாக இரவு 7 மணி வரை திறந்திருக்கும் கடைகள் நேற்று மாலை 4 மணியுடன் மூடப்பட்டன. வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் பலர் அங்கிருந்து வெளியேறி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அவசர நோயாளர்கள் மட்டுமே வைத்தியசாலையில் தங்கி உள்ளனர்

வவுனியா கல்விக் கல்லூரி மாணவர்கள் பலரும் கல்லூரி வளாகத்தை விட்டு வெளியேறி விட்டதாகக் கூறப்பட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் கைகலப்பு

கொழும்பு, நவ. 11

கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் தாதியர்களுக்கும் — சிற்றூழியர்களுக்கும் இடையில் கைகலப்பு ஒன்று ஏற்பட்டது.

அடுத்த ஆண்டுக்கான சீருடைகளைப் பகிர்ந்து வழங்குவது குறித்துத் தாதியர்களுக்கும் — சிற்றூழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தகராறே கைகலப்புக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

## சபையில் கூச்சல் குழப்பம்!

கொழும்பு, நவ. 11

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் நேற்று வன்னிப் போர் நடவடிக்கைகள் குறித்து பிரஸ்தாபித்த போது சபையில் ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருந்தது.

சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அவ

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நிலைமை குறித்து நேற்று நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபம்

கொழும்பு, நவ. 11

வவுனியா நிலைமை நேற்று நாடாளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள பொதுமக்களை அங்கிருந்து வெளியேறுமாறு விடுதலைப்புலிகள் தமது வானொலியில் அறிவித்துள்ளனர் என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

அவசரகால நிலைமையை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தின் போது பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வன்னியில் இடம்பெற்றுவரும் சண்டைகளில் குறைந்த அளவு படையினரே உயிரிழந்ததாக அரசு தெரிவிக்கிறது. ஆனால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தில் பயணம்செய்வோர் எண்ணிக்கை குறைந்தது!

### நேற்று ஒரு சேவை மட்டும்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். — கொழும்பு விமான சேவையில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் மூன்று சேவைகள் இடம்பெற்றன என்றும் —

தற்சமயம் இரு சேவைகளே இடம் பெறுகின்றன என்றும் —

அதற்கும் பயணிகள் போதியளவு வருவதில்லை என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

பயணிகள் போதியளவு வராத காரணத்தால் நேற்று ஒரு சேவை மட்டுமே இடம் பெற்றது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

## 4 பெண்கள் உட்பட 25 பேர் காங்கேசனில்

காங்கேசன்துறை தடைமுகாமில் தற்சமயம் 4 பெண்கள் உட்பட மொத்தம் 25 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டின்பலபகுதிகளில் இருந்தும் இவர்கள் கைதாகி விசாரணையின் பின்னர் காங்கேசன்துறை தடைமுகாமுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

கடந்த வாரம் காங்கேசன் துறைக்கு அனுப்பப்பட்டவர்கள் விவரம் வருமாறு: சண்முகலிங்கம் உதயலீலா (வயது 20), ஐயாத்துரை செல்வராணி (வயது 50), சிவலிங்கம் கமலேஸ்வரன் (வயது 24)

## துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று வாழைச்சேனையில் இருவர்பலி!

மட்டக்களப்பு, நவ. 11

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

காசிபதி ரவீந்திரன் (வயது 20), சதாசிவம் மதன் (வயது 18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

நேற்றைய தினம் வாழைச் சேனைப் பகுதியில் உள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்து 134 பயணிகளுடன் லங்காமுடித்த வருகிறது

திருகோணமலை, நவ. 11

திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 134 பயணிகளுடன் லங்காமுடித்த கப்பல் நேற்று நண்பகல் காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டதாகத் திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 70 பேர், அகதிகள் 235 பேர் ஆகியோரும் பயணிகளில் அடங்குவர்.

இதே வேளை எதிர்வரும் ஞாயிறன்று மீண்டும் ஒரு தடவை திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறவுள்ளதாகவும்—

அந்தக் கப்பல்சேவை மூலம் யாழ். செல்லவிருப்போரைப் பதிவு செய்துகொள்ளுமாறும் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

(இ-5-150)

## ஆறுமுகம் தொண்டமான் அமைச்சராகப் பதவி ஏற்பு

கொழும்பு, நவ. 11

கால்நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக ஆறுமுகம் தொண்டமான் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக விளங்கிய எஸ். தொண்டமான் காலமான பின்னர் அவரது இடத்துக்கு அமைச்சரவையில் ஆறுமுகம் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளையும் நாளை மறுதினமும் ரூபெல்லா தடுப்பூசி வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். குடாநாட்டிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பெண்களுக்கான ரூபெல்லா தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இதுவரையில்தடுப்பூசிபெற்றுக் கொள்ளாத பெண்களுக்கு வருட இறுதிக்குள் அதனை வழங்குவதற்கு சுகாதாரத் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவிகளுக்கும் மறுநாள் சனிக்கிழமை 44 வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் இந்தத் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதால் தடுப்பூசி வழங்கப்படும் நிலையங்களுக்குச் சென்று அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

(க-10)

# தமிழ்த்தினவிழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய தமிழ் மன்றம் நடத்தும் தமிழ்த்தின விழாவும் 'கலைத்தாரகை' 2 ஆவது மலர் வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி. சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயனும் கலந்து கொள்வர்.

[இ-6]

# யம சங்காரம்

யாழ்ப்பாணம், நவ. 11

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய யமசங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

அன்று மாலை 3 மணிக்கு மார்க்கண்டேயர் சிவபூஜைக் காட்சியும் தொடர்ந்து யம சங்கார உற்சவம் பிராயச்சித்த அபிஷேகம் என்பன நடைபெறும்.

(க)

# சஞ்சிகை

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினால் ''தமிழோசை'' என்னும் பெயரில் புதிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்தச்சஞ்சிகையில் ஈழத்து இலக்கியம் பற்றிய பல சிறப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன என்று தமிழ் மன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5)

# உலக சமாதான தினம்

கொழும்புத்துறை, நவ. 11

உலக சமாதான தினம் இன்று நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் இலங்கை உட்பட உலக நாடுகள் எங்கும் ஒற்றுமை, அமைதி, சமாதானம் நிலவி மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசிவேண்டி ஆலயங்களில் ஆராதனைகள், பிரார்த்தனைகள், வழிபாடுகள் என்பவற்றில் ஈடுபடுமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

[இ - 8 - 5]

## இலங்கை மின்சார சபை
## மின்தடை பற்றி அறிவித்தல்

சுன்னாகம் காங்கேசன்துறை 33 கேவிஏ மின் மார்க்கத்தில் முக்கிய சில திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 14—11—99 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரைக்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

''இலங்கை மின்சார சபை சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்.''

**இலங்கை மின்சார சபை.**

மின் பொறியியலாளர்.
யாழ். பிரதேச அலுவலகம்.
சுன்னாகம்.

(சி/9785)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி பீதாம்பரம் சாந்தநாயகி**

மலர்வு 07 - 12 - 1949 — உதிர்வு 12 - 10 - 1999

அம்மாவே! எம்மை அரவணைத்த தெய்வமே!
மாதம் ஒன்று அல்ல எத்தனை சென்றாலும்
ஆறுமோ எம் நெஞ்சு; எமக்குத் துணை யார் அம்மா?
ஆதரிப்பார் யார் உளர் உங்களைப் போல் இங்கு
யார் இருந்தும் என்ன அம்மா ஆகுமோ?
ஆலமரமாய் ஆற நிழல் தந்து நின்ற உனைக்
காப்பாற்ற வழி இன்றிக் கைவிட்டோமா?
காண்போமோ இனி ஒருமுறை உன்னை?
உன் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்.

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட எம் தாயாரின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி செய்தோருக்கும், இறுதியாத்திரையில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 11—11—99 எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள்.**

இல. 4, கலைமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(70894)

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் நடராசா (குஞ்சரம்)

(C. T. B. சாரதி — வவுனியா)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் நடராசா (குஞ்சரம்) 07-11-99 அன்று வவுனியாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் தெய்வயானை தம்பதிகளின் அன்பு மகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், மதுபாலனின் அன்புத்தந்தையாரும் சின்னையா, பாக்கியம், மனோகரன், சோமகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09-11-99 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வவுனியா இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
மனோகரன்
(சகோதரன்)

மிருசுவில் வடக்கு.

(70890)

## கந்தையா சுப்பையா

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த கந்தையா சுப்பையா அவர்கள் (ஓய்வுபெற்ற P.W D ஓவசியர்) புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவநாயகி, வைத்திய கலாநிதி திருக்கணேசன் (லண்டன்), தில்லைநடேசன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), ரதிதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகராசா (ஓய்வுபெற்ற வங்கியாளர்), அருந்ததி (லண்டன்), காலஞ்சென்ற வருணி, கலாநிதி விநாயகலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் யசோதை (கனடா), ஆனந்தி, தமயந்தி, கார்த்திக் (லண்டன்). ஜனனி, செந்தில், முகுந்தன், அமுதன் (அனைவரும் ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13 - 11 - 1999 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மா. இராமதாசன்
(பெறாமகன்)

Dr. T Vinayagalingam,
2/14, Payen Street.
Caulfield North,
Victoria 3161,
Australia
T.P. No. 39572 - 3867

(70901)

## ஆறுமுகம் செல்லையா

(தென்மராட்சி, மட்டுவில் தெற்கு
இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்லையா நேற்று (10-11-99) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கண்மணி தம்பதிகளின் அருமைப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் நேசத்தின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் Dr. செல்வக்குமாரி (ஹோமியோபதி, கனடா), இராஜகுமாரி (படவரைஞர், கொழும்பு), சிவகுமாரன் (கனடா), ஞானக்குமாரி (கனடா), குகானந்தகுமார் (பொறியியலாளர், அமெரிக்கா, சிக்காக்கோ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும் திரு. சிவலிங்கம் (Attorney- at - Law, Canada), திரு. திருக்குமாரலிங்கம் Shroff Pension Dept ), திருமதி அபிராமி (விரிவுரையாளர், இந்தியா), திரு. க. மகேஸ்வரன் (T. A· Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர் நல்லையா, அமரர் சுப்பிரமணியம், திரு. பொன்னுத்துரை, திருமதி யோகம்மா, திருமதி மகேஸ்வரி, நடேசதுரை, பரமேஸ்வரி தங்கராசா ஆகியோரின் சகோதரனும் திருமதி பா. சிவலிங்கம் (இளைப்பாறிய கனிஷ்ட அதிபர், ஆஸ்திரேலியா), திரு. வீரகத்தி (இளைப்பாறிய அதிபர், லண்டன்). அமரர் மகாராசா (ஆசிரியர்), அமரர் Dr. தம்பித்துரை. Dr. இன்பம்—நாகராசா (கொழும்பு), செல்வி T. சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர், நாவலப்பிட்டி), செல்வி R. சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர், கொழும்பு), திருமதி ஐ. சுதாகர் (றோயல் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-11-99) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காந்தாளம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
திருமதி நேசம் செல்லையா
(மனைவி)

''நேச வாசம்'',
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(70895)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
விஜய் — சாளினி
நடித்த
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70814)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த
**உழைப்பாளி**
10.30, 2-30,
(சி/9680)

**லிபேட்டி** அச்சுவேலி.
இன்று மட்டும்
சத்தியராஜ், கௌதமி
நடித்த
**எயர்போட்**
காட்சிகள்: 10.30, 2-30
T.P.No.070-212223
070-212678
(70831)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செச்சினியா மீதான தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## பில் கிளின்ரன் கோருகிறார்

வாஷிங்ரன், நவ. 11

செச்சினியா மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதலை உடன் நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ரஷ்யாவைக் கேட்டுள்ளார்.

பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கும் இந்த தாக்குதலை நிறுத்தி பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண முன்வரவேண்டும் என்றும் அவர் ரஷ்யாவைக் கேட்டுள்ளார்,

செச்சினிய அதிபர் கிளின்ரனுக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்தே கிளின்ரன் இந்தக்கோரிக்கையை விடுத்துளார் என வெள்ளை மாளிகைவட்டாரங்கள் தெரிவித்தன.

அதேநேரம் -

சர்வதேச மட்டத்திலும் ரஷ்யாவுக்கு எதிராக இந்த விவகாரத்தில் நெருக்குதல் கொடுக்கப்பட்டுள்ளது.

[இ-க-3]

# மெக்ஸிக்கோவில் விமான விபத்து

உருவாப்பான். நவ.11

மெக்ஸிக்கோவில் இடம் பெற்ற விமான விபத்தொன்றில் 18 பேர் உயிரிழந்தனர்.

13 பயணிகளுடன் 5விமானச் சிப்பந்திகள் சென்ற இந்த விமானம் மெக்ஸிக்கோ நகருக்கு 300 மீற்றர் தொலைவில் உள்ள உருவாப்பானிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கீழே விழுந்து நொறுங்கியது.

விபத்துக்கான காரணம் எதுவும் தெரியவில்லை.

(க-8)

# செச்சினியா மீதான தாக்குதல் நிறுத்தப்பட மாட்டாது

## ரஷ்யப் பிரதமர் தெரிவிப்பு

மொஸ்கோ, நவ. 11

செச்சினியா விவகாரத்தில் அமெரிக்காஉட்பட சர்வதேச சமூகம் விடுக்கும் கோரிக்கையை ஏற்கக் கூடிய நிலையில் நாம் இல்லை. எமது தாக்குதல் தொடர்ந்து இடம் பெறும். இப்படி ரஷ்யப் பிரதமர் விளாடிமிர்புடின் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மொஸ்கோ தொலைக்காட்சியில்பொதுமக்களுக்கு விடுத்த செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்காவோ, அல்லது சர்வதேச நாடுகளோ கொடுக்கும் அழுத்தங்களுக்கு தாம் அடி பணியப் போவதில்லை என்றும்—

இஸ்லாமியத் தீவிரவாதிகளை விரட்டும் வரை எமது நடவடிக்கைகள் தொடரும் என்றும் — அவர் தெரிவித்தார்.

செச்சினியாவுக்கு வெளிநாட்டுக் கூலிப் படைகள் உதவி வருகின்றன என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

[க-3]

# தாக்குதல் தீவிரம்

மொஸ்கோ, நவ 11

செச்சினியா மீதான தாக்குதலை ரஷ்யப் படைகள் தீவிரமாக்கியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுளளது.

செச்சினியாவில் முக்கிய நகரங்கள் மீது ஹெலிகளும், விமானங்களும் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் —

நேற்றைய தாக்குதவில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் —

தற்போது நிலவும் காலநிலை ரஷ்யப் படைகளின் நடவடிக்கையைப் பெரிதும் பாதித்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனாலும் அவர்களின் நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாக ரஷ்யப்படைகள் அறிவித்துள்ளன.

(இ-க-3)

# தொடர்ந்துவேலைநிறுத்தம் பங்களாதேஷில் பாதிப்புகள்

## கலவரங்களில் 100 பேர் காயம்

டாக்கா, நவ. 11

பங்களாதேஷில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் உடன் பதவி விலக வேண்டும் என்றும் —

தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் — கோரி பங்களாதேஷில் இடம்பெறும் வேலைநிறுத்தம் காரணமாக சகல பணிகளும் ஸ்தம்பித்துள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இடம் பெற்ற வேலைநிறுத்தம் காரணமாக பல இடங்களில் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன.

இந்தச் சம்பவங்களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நூறு பேர் காயம் அடைந்துள்ளனர்.

பல இடங்களில் வாகனங்கள் சேதத்துக்குள்ளாக்கப்பட்டன; பல இடங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் மட்டும் இந்த வேலை நிறுத்தம் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2 ஆவது நாளாக நேற்றும் வேலை நிறுத்தம் தொடர்ந்தது.

அங்கு நேற்றும் கலவரங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-3)

# முதலமைச்சராக ராம்பிரகாஷ் குப்தா

உத்தரப் பிரதேசத்தின் புதிய முதலமைச்சராக ராம் பிரகாஷ் குப்தா இன்று பதவி ஏறகவுள்ளார்.

கடந்த தேர்தலில் உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட கல்யாண்சிங் தோல்வியடைந்தார்

கல்யாண்சிங் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு பாரதீய ஜனதா கேட்டிருந்தது.

கல்யாண்சிங்கின் இடத்திற்கே ராம் பிரகாஷ்குப்தா நியமிக்கப்படவுள்ளார்.

# யூகோவில் தேர்தல் நடத்தக் கோரி மாணவர் ஆர்ப்பாட்டம்

பெல்கிரட், நவ 11

யூகோஸ்லாவாக்கியவில் விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

நகரில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கூடி அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்

மாணவர் போராட்டத்துக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்ளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஆங்காங்கே மோதல்களும் இடம்பெற்றன. (இ-க-3)

# இஸ்ரேல் பலஸ்தீனம் புதிய உடன்பாடு

ஜெரூசலம், நவ. 11

இஸ்ரேலுக்கும். பலஸ்தீனத்துக்கும் இடையில் நிலவும் நெருக்கடி நிலையைத் தணிக்கும் வகையில் இரு தரப்புக்கும் இடையில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது

இரு நாடுகளின் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் கூடி இரு மணிநேரம் விவாதித்துப் புதிய உடன்பாடு ஒன்

## உலக அரங்கில்

றைக் கண்டுள்ளனர்.

அடுத்து வரும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் தீர்வு காண்பது என்ற காலக்கெடுவுடன் மூன்று விடயங்களில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

ரம்லாத் நகரை ஒப்படைத்தல், ஜெரூசலத்துக்கு அந்தஸ்து வழங்கல், பலஸ்தீன அகதிகள் தாயகம் திரும்புதல் ஆகிய விடயங்களிலேயே இந்த உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கூட்டாகச் செய்தியாளர் மாநாடு நடத்தாமல் தனித்தனியாக மாநாடு நடத்தி இந்த உடன்பாட்டு விடயங்களை அறிவித்தனர்.

(இ-க-3)

# செச்சினியா மீது குண்டு வீச்சு; சபாநாயகர் தப்பினார்

மொஸ்கோ, நவ. 11

செச்சினியாவில் ரஷ்யப்படைகள் மேற்கொண்ட குண்டு வீச்சின் போது அந்த நாட்டின் சபாநாயகரின் வீட்டின் மீது குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்தது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்; அங்கிருந்த ஐவர் உயிரிழந்தனர்.

ரஷ்ய விமானம் வீசிய 250 கிலோ நிறையுடைய குண்டு ஒன்று சபாநாயகரின் வீட்டின் மீது வீழ்ந்து வெடித்ததாகவும் —

அச்சமயம் அவர் வீட்டில் இருந்த போதும் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பினார் என்றும்—

அந்த வீட்டில் இருந்த ஐவர் உயிழந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வீழ்ந்ததால் அங்கு 12 அடி ஆழமுள்ள குழி ஒன்று ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. [இ-க-3]

# டென்மார்க்கில் வன்முறை; பொலீஸார் கண்ணீர்ப் புகை

கோபன்ஹேகன், நவ. 11

டென்மார்க்கின் தலைநகரில் கடந்த திங்கட் கிழமை இடம் பெற்ற வன்முறைகளைப் பொலீஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை ஏவிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

டென்மார்க்கில் பிறந்த துருக்கி நாட்டு இளைஞர் ஒருவரை நாடு கடத்த பொலீஸார் முயற்சி மேற்கொண்டதை அடுத்தே மோதல்கள் வெடித்தன.

பொலீஸாரின் இந்தச் செயலைக் கண்டித்து முகமுடி அணிந்த 150 இளைஞர்கள் நகருக்குள் நுழைந்து காட்சி அறைகளையும், அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களையும் தாக்கி தீ வைத்தனர்.

இதைத் தொடர்ந்து அங்கு விரைந்த படையினர் அமைதியை நிலை நாட்டமுனைந்தனர்.

பொலீஸார் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தியதை அடுத்து பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை ஏவி ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைத்தனர்.

[இ-க-3]

# இஸ்ரேலில் குண்டு வெடிப்பு

ரெல் அவீவ், நவ.11

இஸ்ரேலிய வடபகுதி நகர் ஒன்றில் கடந்த திங்கள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15 பேர் காயமடைந்தனர்.

பஸ் நிலையம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அப்பகுதியில் இருந்து மேலும் மூன்றுகுண்டுகளை பொலீஸார் கண்டுபிடித்து செயலிழக்க வைத்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காகவே இந்தக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்று இஸ்ரேலிய பொலீஸார் தெரிவித்தனர்.

[ஐ-6]

# பாக். எல்லையில் இருந்து படை விலக்கல் இல்லை

## இராணுவ ஆட்சியாளர் அறிவிப்பு

இஸ்லாமாபாத், நவ. 11

''இந்தியாவில் சர்வதேச எல்லையில் இருந்து படைகளை விலக்குவோம். ஆனால் எமது எல்லைப் பகுதியில் இருந்து படைகளை விலக்கமாட்டோம்''

இப்படிப் பாகிஸ்தான் ஆட்சியாளர் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சர்வதேச எல்லையிலும், பாகிஸ்தான் எல்லையிலும் உள்ள படைகளை வாபஸ் பெறுமாறு அமெரிக்கா பாகிஸ்தானைக் கேட்டிருந்தது.

இதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே முஷாரப் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேநேரம் —

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் நேற்றுப் பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கு விடுத்த கோரிக்கையில், இந்தியாவுடன் நட்புறவுகளை வளர்க்க காஷ்மீர் விவகாரம் குறித்துப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு கேட்டுள்ளார்.

இதற்கிடையில்—பாகிஸ்தான் படையினர் காஷ்மீர் எல்லையில் சவுபத் என்ற இடத்தில் உள்ள இந்திய நிலை மீது நேற்று முன்தினம் மாலை தாக்குதல் நடத்தினர் என்றும்—தாம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 10 படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும்—இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய நிலைகள் மீது குண்டுத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இநதியா தெரிவித்துள்ளது (இ-க-3)


**வடமாகாண அதிபர்கள் சங்கம்**

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 14 – 11 – 99 ஞாயிறு காலை 10 மணி

இடம்: ரோட்டறிக் கழக மண்டபம்
(அருண்ஸ் மேல்மாடி)
உதயன் அலுவலகம் அருகில்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உறுப்பினர்களையும், உறுப்பினராகச் சேரவிரும்பும் தரம் பெற்ற அதிபர்களையும், அழைக்கின்றோம்.

ஆ. சி. நடராஜா
செயலாளர்

(70887)


# ஜேர்மன் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆறரை வருட சிறைத் தண்டனை

பேர்லின், நவ. 11

கிழக்கு பேர்லினுக்கும் மேற்கு பேர்லினுக்கும் இடையில் அமைந்திருந்த சுவரைத் தாண்ட முயறசித்த பொது மக்களைச் சுட்டுக்கொலை செய்தமைக்கு காரணமாக இருந்ததாகக் கூறப்படும் கிழக்கு ஜேர்மனியின் கடைசி ஜனாதிபதியான ஈகொன் கிறாக்குக்கு ஆறரைவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டு உள்ளூர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவருக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைத் தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று ஊர்கிதம் செய்தது.

அதே நேரம் — கிழக்கு பேர்லினுக்கும் மேற்கு பேர்லினுக்கும் இடையே 1961 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 400 மைல் நீளமான மதில் 1989 ஆம் ஆண்டு உடைக்கப்பட்ட 10 ஆம் ஆண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்த நிகழ்வை மக்கள் குதூகலமாகக் கொண்டாடினர்.

(இ-க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கோப்பாயைச் சேர்ந்த இராஜரட்ணம் சுசியந்தி என்பவரது தே. அ அ. இல: (757022494V) விசேட அ அ. இல. (0903008152) யும் யாழ். நகரில் சிறிய பேசுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கணேசா நகையகம், அல்லது சோபனா ஆடையகம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(70868)

நீர்வேலி வடக்கு கட்டி மேடையைச் சேர்ந்த நடராசா கிருஷ்ண கிதா என்பவருடைய விசேட அ. அ இல. 0903003641 பஸ் நிலையத்திற்கும் K. K. S. வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சாரங்கா நகைமாடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(70875)

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சின்னராஜா ராஜராஜேஸ்வரன் என்பவரது தேசிய, விசேட அ. அட்டைகள 620722898V — 0905004124, திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். சின்னராஜா ராஜராஜேஸ்வரன், சிவஸ்தான், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(70839)

நாவாந்துறை வடக்கைச் சேர்ந்த பிரான்சிஸ் சகாயராணி ஆகிய எனது தேசிய, விசேட அ. அட்டைகள் (825732640V 0901028884) யாழ் மனோகரா தியேட்டருக்கும், பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து எல். கெங்காதரன் (விமலா ஸ்ரோர்ஸ் முன்னால்), இல. (314) 448. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(70830)

இராமலிங்கம் நந்தினி என்பவரது தேசிய. விசேட அடையாள அட்டைகள் (757561620 V-09070079 73) மல்லாகத்திற்கும் அளவெட்டிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவாகள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவவும். இ. திருக்குமார், தையிட்டிப்புலம், தெல்லிப்பழை.

(67863)

அச்சுவேலி தெற்கு மாவடி வீதியைச் சேர்ந்த அருளானந்தம் பிறேமினி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (796014393V — 0903007443) யாழ். நகர் கடை வீதியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(70836)

## காணிவிற்பனை

கோயில் வீதி — பிரதான வீதி. - கண்டிவீதி - ஆஸ்பத்திரி வீதி, என்பனவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ள 1 பரப்பு [குளி- 17-25] கிணற்றுடன் கூடிய சதுரக் காணி (468/1 St. John's Churh Lane) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு 28/1 சோமசுந்தரம்ஒழுங்கை, சுண்டுக்குளி, T P. NO 2379.

[70811]

## விற்பனைக்கு

எம்மிடம் புதிய மணவறைகள் மற்றும் கடைப்பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரிகள் இரண்டு, நல்ல நிலையில் உள்ள ரயர் வண்டில் மாட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அனுஷா, கே கே. எஸ். வீதி, கோண்டாவில்.

[70864]

## சிவாலய தரிசனவிதி

சிவாலய தரிசன விதி ஆறுமுக நாவலர் இயற்றியது. விலை ரூபா 20. 125, அரசடி வீதி. கந்தர்மடம் என்ற முகவரியில் பெறலாம்.

[70838]

## விற்பனைக்கு

கண்டிவீதி, கைதடி நுணாவில் அறவழி காரியாலயத்துக்கு அருகில் பனை. தென்னை, மாமரம், விளாத்தி மரம், கிணறு முதலியன அடங்கிய 9 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. S. ஞானசம்பந்தர், சிவன்கோயில் லேன், புகையிரத வீதி, சாவகச்சேரி அல்லது இராமலிங்கம் 373, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

[70869]

$3\frac{1}{4}$' உயர திண்டுக்கல் இரும்புப்பெட்டி (அயன்சேவ், ரூபா 25,000) 311, KKS வீதி, கடையிலும் $2\frac{1}{4}$' உயர திண்டுக்கல் இரும்புப்பெட்டி (அயன்சேவ் ரூபா 15,000) 92, 4 ஆம் குறுக்குத் தெரு, விலும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். ஜி பிள்ளை, 92, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் காலை 9 - 4 மணிவரை.

[70876]

மீன் தொட்டிக்குரிய அலங்காரப் பொருள்கள், மோட்டர்கள், ஸ்ரிக்கர்கள், பில்ரர் வெளிநாட்டு மீன் உணவு வகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஐ அருளானந்தம் (குட்டி) 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.

[70867]

## விற்பனைக்கு

KELVINATOR FRIDGE – 27,500 ரூபா (DoubleDoor)

SINGER FRIDGE60 cu.ft. – 15,000 ரூபா

தையல் மெசின் MOTOR – 1,500 ரூபா

**சாயிராம் பார்மசி,**
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி

[70851]

## அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

**யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலய**
தமிழ் மன்றத்தின் கலைத்தாரகை மலர் வெளியீட்டை முன்னிட்டு நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பின்வருமாறு:

1) 1290 2) 514 3) 548

இதற்கான பரிசில்கள் 11-11-99 இன்று நடைபெறும் கலைத்தாரகை வெளியீட்டில் வழங்கப்படும்.

தமிழ் மன்றம்

யா/ கனகரத்தினம் ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

(70883)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவனான
த. ஜெயந்தன்
அவர்களது அன்புத் தாயார்

**த. தையல்நாயகி**

அவர்கள் 08-11-99 அன்று காலமானார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவபீட 17 ஆம் அணி மாணவர்கள்,
யாழ். பல்கலைக் கழகம்.

(70892)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



### அமரர் செல்லர் புவனேஸ்வரன்

மலர்வு 10–07–1949 உதிர்வு 12–10–1999

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட புன்னகை தவழும் புவனேஸ்வரனே வருவீர் வருவீர் என எதிர்பார்த்தோம். மீளாத இடம் நோக்கி சென்றனையோ! எங்கள் ஏக்கம் தீர்க்க ஏன் மறுத்தாய்?

இன்று நடைபெறும் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் சலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.


அன்னாரின் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(70885)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

(இலங்கை) பிறப்பு 10 — 07 — 1949



(ஜேர்மனி) இறப்பு 12 — 10 — 1999

அமரர்
**செல்லர் புவனேஸ்வரன்**
(உரும்பிராய் கிழக்கு)

எமது மூத்த மருமகனே புவனேஸ்வரா! எமக்கு கடமை செய்வாயென நாம் காத்திருக்க உமது கடமை செய்ய வைத்து எங்களை கலங்க வைத்ததேனோ?

எமது இல்லத்தில் இன்று (11—11—99) நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உமது ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பரமு (மாமா), தவமணி (மாமி),
ரவீந்திரன் (சகலன்) (எலக்ரீசியன்).

பாரதிபுலம்,
திருநெல்வேலி கிழக்கு.

(70844)

## நாளை (12-11-1999) ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்

# ஆன்மீகப் போராட்ட 8 ஆம் ஆண்டுப்பூர்த்தி வழிபாடு

(இறை விண்ணப்பம்)

பிற்பகல் 3.00 மணியளவில்: விசேஷ அபிஷேகம், பூசை வழிபாடு, சுவாமி வீதி உலா

இரவு 7.00 மணியளவில்: வன்னிவாழ் மக்களைக் காக்கவும் உடன் யுத்த நிறுத்தம் வேண்டியும்

**விடிவிளக்குகள் 108 ஏற்றிவைக்கப்படும்**

அன்று போர்த்துக்கேயருக்கு காக்[illegible] தமிழினத்தைக்காக்க எப்படியில்?... ?... ?.. ?

சோழியூரான் – பிறைசூடிக்குரு

(70883)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் போர் முனையில் பணிபுரிந்த படையினருக்கு ஓய்வு வழங்குக

## ஐ. தே. க. நாடாளுமன்றக்குழு கோரிக்கை

கொழும்பு, நவ 11

வன்னிப் போர் முனையில் பணிபுரிந்த படையினர் பெரிதும் களைத்து விட்டனர். அவர்களுக்கு ஓய்வு வழங்க வேண்டும் என்று ஐ.தே.க நாடாளுமன்றக் குழு கேட்டுள்ளது.

நாடாளுமன்றக்குழு கடந்த திங்கள் மாலை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய சமயம் வன்னியில் படையினர் சந்தித்துள்ள தோல்வி குறித்து விரிவாக ஆராய்ந்தது என்று ஐ தே க. வட்டாரங்கள் தெரிவித்தன.

''வன்னிப் படையினர் போரில் களைத்துவிட்டனர். ஆகவே அவர்களுக்கு ஓய்வு தேவை. ஓய்வின் பின்னர் அவர்கள் புத்துணர்வுடன் பணிபுரிய வசதி செய்ய வேண்டும்.

யுத்த இழப்புக்கான பொறுப்புக்களை முப்படைத் தளபதி என்ற முறையில் ஜனாதிபதி ஏற்க வேண்டும்-'' இப்படி ஐ.தே.க. நாடாளுமன்றக்குழு தீர்மானம் எடுத்துள்ளது. (இ-க-3)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 8 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

நெடுந்தீவு

[12422 ஏ],

யாழ்ப்பாணம்

(124296 ஏ),

ஊர்காவற்றுறை

[12232 ஏ), (12232 பி), (12378 ஏ), ]12378 பி), [12378 சி], [12386 ஏ), (12386 பி[, [12386 சி], (12407 ஏ), [12421 ஏ), (12496ஏ),

கோப்பாய்

[123109 ஏ[,[123109 பி], [123232 ஏ],

நல்லூர்

(104396 ஏ], ]117645 ஏ), [122918 ஏ), (122998 ஏ), (123052 ஏ), [123053 பி), [123103 ஏ[, [124268 ஏ], [124283 ஏ[, [124284 ஏ], [124286 ஏ). [124301 ஏ), (124572 ஏ],

வேலணை

(12373ஏ), (12381ஏ), (12381பி), (12399ஏ), (12401ஏ), (12406ஏ), (12415ஏ), (12415பி), (12447ஏ), (12447பி),. (12409ஏ) (,¿5215ஏ) [12754பி[.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 09 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு: —

யாழ்ப்பாணம்

(122440ஏ), (124519ஏ), [124519பி], [124551ஏ], [124551பி], [124561ஏ], [124561பி], [124619ஏ], [124619பி], [124619சி].. [124619டி[, [124642ஏ], [124652ஏ], [124660ஏ[, (124660பி), (124662ஏ), (124662பி), (124662சி), (124673ஏ), (124775ஏ) (124775பி), (124775சி), (124775டி), (124775ஈ), (124777ஏவ்), (124777ஏ), (124777பி), (124777சி), (124777டி), (124777ஈ). (124819ஏ), (124819பி), (124819சி), (124842ஏ), (134870ஏ), (124884ஏ), (124918ஏ), (124918பி), (124918சி), (124935ஏ).

நல்லூர்

(122467ஏ), (122467பி), (124695ஏ).

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 11

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் அமரர் இ ந.வீரப்பனின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறும். (ஐ-30)

## மாணவன் விடுவிப்பு

யாழ்ப்பாணம். நவ. 11

கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மாணவர் ஒருவர் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மாணவனான வீரசாமி நித்தியானந்தன் (வயது 17) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார். (க-10)

## நியமனம்

வலி. தென்மேற்கு, நவ. 11

நான்காயிரம் பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதியினருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

வெற்றிடங்களைப் பொறுத்தும் பட்டதாரிகளின் தேவைகளைப் பொறுத்தும் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது. இதே வேளை யாழ். மாவட்டத்திலிருந்து 4000 பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் 70 பேரை நியமனம் செய்வதாகக் கூறப்பட்ட போதிலும் 10 பேருக்கே நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (இ-8-185)

## பரீட்சைக் கட்டணம்

யாழ்ப்பாணம், நவ. 11

''சீடா'' திட்டத்தை உள்ளடக்கிய யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 11 மாணவர்களுக்குப் பரீட்சைக் கட்டணமாக 20 ரூபா மட்டுமே அறவிடும்படி கல்வித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறும் சமூகக்கல்வியும் ஆகிய பாட வினாத்தாள்கள் வழமை போன்று இலவசமாகவே வழங்கப்பட உள்ளதாகவும் ஏனைய பாடங்களுக்கான பரீட்சைக் கட்டணமாகவே 20 ரூபா அறவிடப்படுவதாகவும் தெரியவருகிறது. (இ-8-10)

## புனரமைப்பு

இவ்வருட முற்பகுதியில் மினி சூறாவளியினால் பாதிக்கப்பட்ட வல்வை சிவகுரு வித்தியாலய மேல்மாடிக் கட்டடம் 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அனுசரணையில், மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த புனரமைப்பு வேலையுடன் மேலும் 5 லட்சம் ரூபா செலவில் [illegible] [illegible] அமைக்கப்பட்டு வருகின்றது. [இ-104]

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

வலிகாமம் தெற்கு, நவ. 11

தரம் ஒன்று ஆரம்பக்கல்வி கணிப்பீடு தொடர்பான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளது. (க-152)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் நாகலிங்கம்

(நகை வியாபாரம் - கே.எஸ். நாகலிங்கம் அன் சன்ஸ்)

மலர்வு 09-04-1921 — உதிர்வு 26-10-1995

திதி: 11-11-1999

ஆண்டு நான்கு சென்றாலும்
உங்கள் நினைவலைகள்
என்றும் எம்மைவிட்டு நீங்காது

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

192/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (70826)



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நவரத்தினசாமி குருசாமி

மலர்வு 29 – 06 – 1932 — உதிர்வு 03 – 11 – 1997

திதி 11 - 11 - 99

அன்புடனும் பண்புடனும் எம்மை வாழ
வழி வகுத்த எங்கள் அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஈராண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டு ஓயாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்:
கு. விமலன் (மகன்)
அரியாலை, யாழ்ப்பாணம். (70850)



## நெஞ்சத்தை விட்டகலா இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### சின்னத்துரை மதியாபரணம் (மதி)

( எழுதுவினைஞர், தரம் 1 யாழ் பல்கலைக்கழகம் )

மலர்வு: 03 – 09 – 1953 — உதிர்வு: 03 – 11 – 1997

திதி: 11 – 11 – 1999

ஆண்டிரண்டு சென்று விட்டாலும் உங்கள் நினைவு எங்கள் மனதிலிருந்து ஒரு போதும் நீங்காது. அன்புத் துணைவராய் பாசமிகு அப்பாவாய் அன்புடன் அரவணைத்து பெருவாழ்வு வாழ்ந்தீர். இத்தனை விரைவில் எங்களை விட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
நண்பர்கள், அயலவர்கள்.

இல. 17, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (70636)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

### மானிப்பாய் இந்துக் கல்லூரி

வலிகாமம் வலய உதைபந்தாட்டப் போட்டியில்
16, 18 வயதின் கீழ் பிரிவுகளில்
சாம்பியனாக வெற்றியீட்டியதையும்,
கோட்ட மட்டத்தில் 14 வயதின் கீழ் பிரிவும் சாம்பியனாக
வெற்றியீட்டியதையும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

இன்றறக்ற் கழகம்
Interact Club

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (70857)

## வாழ்த்துகின்றோம்

### யா/மானிப்பாய் இந்துக்கல்லூரியிலிருந்து

க. பொ. த. (உ. த) ஓகஸ்ட் 1998
பெறுபேறுகளின்படி

### பல்கலைக்கழக அனுமதித் தகைமை பெற்றோர்

| மாணவர் | துறை |
| --- | --- |
| ச ஆதவன் | பொறியியல் 1 |
| ம. மோகனதாஸ் | பௌதிக விஞ்ஞானம் |
| ச. அன்ரன் அருள்வண்ணன் | பௌதிக விஞ்ஞானம் |
| ச. சிறிசங்கர் | பிரயோக விஞ்ஞானம் |
| நி. விஜயானந்த சர்மா | உயிரியல் விஞ்ஞானம் |
| அ. சுஜீதரன் | முகாமைத்துவம் 1 |


மேலும் இடப்பெயர்வினால் தவிப்பட்ட பரீட் சார்த்திகளாகத் தோற்றி தகைமை பெற்ற எமது கல்லூரி மாணவர்கள் வருமாறு:

| | |
| --- | --- |
| கா. சசிகரன் | மருத்துவம் |
| க. கணேசமூர்த்தி | பொறியியல் 1 |
| பொ. குமரேசன் | பௌதிக விஞ்ஞானம் |
| பொ. கிருபானந்தன் | பௌதிக விஞ்ஞானம் |
| யோ. ரஞ்சித் மனோகரன் | பிரயோக விஞ்ஞானம் |
| ம. நிருபன் | முகாமைத்துவம் 1 |

இன்றறக்ற் கழகம்
INTERACT CLUB

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி. (70856)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா அமிர்தலிங்கம்

(யாழ். போதனா வைத்தியசாலை, ஓய்வு பெற்ற உழியர்)

மலர்வு 05 - 12 - 1929
உதிர்வு 22 - 11 - 1998

ஆண்டு ஒன்று ஆனதையா!
அன்பு முகம் பார்த்து
ஆண்டு ஆயிரமானாலும்
அகன்றிடுமோ உம் நினைவுகள்

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்.

உமது பிரிவில் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

17/4, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## பாஸ்கரன் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், நவ 11

"இசையில் மிகுந்த ஈடுபாடும் இசைக்கலையில் ஒருபால் மிகுந்த அன்பும் அரவணைப்பும் கொண்டு விளங்கிய வலி. வடக்கு பிரதேச சபைத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனின் மறைவு பேரிழப்பாகும்".

இவ்வாறு அன்னாரின் மறைவு குறித்து இலங்கை இசைவேளாளர் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்த அனுதாபச் செய்தியில் அன்னாரின் மறைவு குறித்துஇசை வேளாளர் சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## மீட்டல் வகுப்பு

வலி. தென்மேற்கு, நவ 11

யாழ். திறந்த பல்கலைக் கழக முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மீட்டல் வகுப்பு இடம்பெறும் என பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே அறிவித்தபடி 14ஆம், 21ஆம் திகதிகளில் இந்தவகுப்பு நடைபெறமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-185)

## ஆங்கில வகுப்பு

வலிகாமம்தெற்கு, நவ. 11

'யுனெஸ்கோ' ஆதரவில் இரண்டாம் கட்ட விசேட ஆங்கில வகுப்புக்கள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் பிரதி சனி, மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 3.30 மணி முதல் நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்பில் சேர்ந்து கொள்ள விரும்பும் ஜி. சீ. ஈ, உயர்தர தகைமை பெற்ற— பாடசாலையில் இருந்து விலகிய மாணவர்கள் தமது கல்விச்சான்றிதழ்களுடன் எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு மேற்படி கல்லூரிக்கு வருகை தருமாறு 'யுனெஸ்கோ' பணி இணைப்பாளர் ந. சந்திரபாலன் தெரிவித்துள்ளார்.

(க-152)

## மலசல கூட கோப்பைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ 11

யாழ். மாநகரசபையின்சுகாதார அதிகாரி பணிமனைக்கு சுமார் 200 மலசலகூடக் கோப்பைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். பணிமனையால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாநகரசபையின் கழிவகற்றும் இயந்திரம் பழுதடைந்தமையால் அதற்கான இயந்திரமும் வழங்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-10)

## பயிற்சி நெறி

கொழும்புத்துறை, நவ. 11

வடபகுதி மீள்புனர்வாழ்வு அதிகார சபையின் அனுசரணையுடனும் இலங்கை வங்கியின் ஆதரவுடனும் மாவட்டச் செயலகம் நடத்தும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி நெறி நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமானது.

மேற்படி பயிற்சி நெறி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறும் என பயிற்சி நெறிக்குழு தெரிவித்துள்ளது.

(இ-8-10)

உ

நவாலி வடக்கில்
புதிய சேவை

ஹேமா தொலைத்தொடர்பு சேவை

24 மணி நேரமும் உள்ளூர் - வெளியூர் தொடர்புகள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாடு: 070-212676
வெளிநாடு: 0094-70212676

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

புலவர் வீதி, நவாலி வடக்கு.
(சி/9780)

## கண்ணீர் அஞ்சலி

எமது வணிகர்களின் முக்கிய தேவைகளை உடன் உணர்ந்து சேவையாற்றிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்

### இராஜகுலசிங்கம் அவர்களின்

திடீர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாவ. கைத்தொழில்,
வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(சி/9777)

## 31 ஆம் நாள் நினைவலைகள்
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



துர்க்காபுரம், தெல்லிப்பழை

அமரர்

### சண்முகம் வெற்றிவேல்

[பலசரக்குக் கடை உரிமையாளரும் முன்னாள் 1ஸ்ரீ687 கார் உரிமையாளரும்)

மண்ணில் 19-01-1937
விண்ணில் 12-10-1999

எங்கள் அன்புத் தெய்வமே!
கண்களில் நீருடன் கலங்கி நிற்க
எமை விட்டுப் பிரிந்து சென்றது ஏனோ?
உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வுகளால் என்றும் எம்முடனே
உங்கள் நினைவுகள் தொடரும்.

உங்கள் ஆத்மசாந்திக்காக துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்

12—10—99 அன்று இறைவனடி எய்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (11—11—1999) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
சகோதரம், மைத்துனர்.

தகவல்:
வெ. கெங்காதரன் (மகன்)
[உ/த மாணவன் மகாஜனக் கல்லூரி]
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

(70847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உதைபந்தாட்டம்

கொழும்பில் அரசியல் களம் சூடு பிடித்து வருகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்குவேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்படுவதற்கு முன்னரே, வாக்குத் திரட்டும் உத்திகளை அரசியல் தலைவர்கள் ஒப்பேற்ற முனைந்துள்ளனர்.

குறிப்பாக, பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு தேடுவதில் — வாக்கு வங்கியைப் பெருக்குவதில் — பல வழிகளாலும் காரியங்கள் வேகமாகவும் தீவிரமாகவும் நடைபெற்று வருகின்றன. அரசாங்க ஊடகங்கள் இப்பொழுதே தமது பிரசாரப் பீரங்கியைப் பக்கச்சார்பாக, அரசாங்கக் கட்சிக்கு மட்டுமே முழங்கி வருகின்றன.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே ஏனைய வேட்பாளர்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரசாரம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் அதற்கு முன்னர் உள்ள இந்த இடைக் காலத்தை அரச சார்பான பிரசாரத்துக்கே முழுக்க முழுக்க மேற் கூறிய இரண்டு ஊடகங்களும் பயன்படுத்துகின்றன என்றால் மிகையல்ல.

சந்திரிகா குமாரதுங்க தமது பதவியைப் பயன்படுத்தி வெளி மாவட்டங்களில் உத்தியோக பூர்வ நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்தி மக்களை நேரில் சந்திக்கிறார். அந்நிகழ்வுகளில் தப்பாது அரசியல் பேச்சுக்களும் நடத்துகிறார். அவையும் ஒரு வகையில் காலம் முந்திய தேர்தல் பிரசாரமாகவே அமைகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலதிகமாக, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஆளுங்கட்சிக்குப் பக்கம் மாறிய அரசியல்வாதிகள் குறித்தும் பெருத்த அளவில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசாரம் செய்யப்படுகிறது.

தெற்கில் அரசியல் களம் இவ்வாறு சுறுசுறுப்பு அடைந்துள்ள அதே வேளையில், வன்னியிலோ போர்க்களம் மிக வெப்பம் அடைந்துள்ளது; தணல் பறக்கிறது. ஆனால் அது பற்றிய தாக்கமோ, பாதிப்போ இல்லாதது போல மேற்போர்வை மூடப்படுகிறது. இதன் பாதிப்புகள் தங்கள் வாக்கு வங்கியைத் தேய்மானம் காண அனுமதிக்கக் கூடாது என்பது ஆளுந்தரப்பினரின் ஆதங்கம்.

ஆனால் எதிர்த்தரப்போ போர் நிலைமையைத் தக்கவாறு பயன்படுத்தித் தனக்கு வாக்குச் சேர்க்க முயல்கிறது. அதற்கானஉத்திகளை வகுத்து ஒவ்வொன்றாக அவிழ்த்து விடுகிறது.

காலாதி காலமாக — கடந்த சுமார் ஐம்பது வருடங்களாக — தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளும்தமிழர் விவகாரத்தை தமது அரசியல் லாபத்துக்கும், தெற்கில் வாக்குச் சேர்ப்பதற்கும் பயன்படுத்தி வந்தன. அதனாலேயே இனப்பிரச்சினை தீர்வின்றி இதுநாள் வரை இழுபடுகிறது.

அதே போல, போரையும், அதன் வெற்றி தோல்விகளையும், பாதிப்புகளையும், நஷ்டங்களையும் தமக்கு வாக்குத் திரட்டத் தக்கவாறு இப்போது பயன்படுத்துகின்றன. போட்டி போட்டு ''ஒட்டப்பந்தயம்'' நடத்துகின்றன. தீர்வைப் போலவே, போரையும் தொடரச்செய்யும் உத்தி இது. இரு தரப்புகளும் ஒருபக்கத்துக்குச் சேர்ந்து ''கோல்'' போடும் உதைபந்தாட்டம் நடைபெறுகிறது?

# பாதிப்புற்ற மன்னார் விவசாயிகளுக்கு உள்ளீடு மற்றும் உதவி கிடைக்கும்

## துயர் துடைப்பு, மறுவாழ்வுச் சங்கம் நடவடிக்கை

மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச்சங்கம் நானாட்டான், முருங்கன், மன்னார்ப் பகுதிகளில் சமீபத்தில் விவசாய, சுகாதார பயிற்சி வகுப்புகளை நடத்தியது. இது தொடர்பாக பிரஸ்தாப சங்கம் வெளியிட்ட அறிக்கை இது.

மன்னார் மாவட்ட மக்களில் 69 சதவீதமானோர் விவசாயத்திலும் 21 சதவீதமானோர் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 1990 ஆம் ஆண்டுக்குப் பின் வன்செயல்களினால் உழைப்பாளிகளை இழந்த 200 இளம் குடும்பத்தினர் உள்ளனர். இவர்களில் அனேகர் விவசாய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

1999/2000 காலபோகத்தில் 1 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்வதற்காக மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் நிதி உதவியுடன் 300 குடும்பங்களுக்கு உதவி செய்து வருகின்றது.

இவர்கள் இரணை இலுப்பைக்குளம், பாலம்பிட்டி, முருங்கன், நானாட்டான், ஆள்காட்டிவெளி, மாந்தை, உயிலங்குளம் கமநல சேவை நிலையப் பிரிவுகளுக்குள் அடங்குவர். இடம்பெயர்ந்து ஆள்காட்டிவெளியில் தங்கி உள்ள பாதிக்கப்பட்ட இலுப்பைக்கடவை, விடத்தல்தீவு குடும்பங்களுக்கும் 1 ஏக்கர் குத்தகை செய்வதற்கு உதவி வழங்கப்படும்.

பாதிக்கப்பட்டவர்களை அப்பகுதி ம.து.ம.ச. செயற்குழு உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் வண.பிதா அ. சேவியர் குருஸ் அடிகளார் கேட்டுக் கொண்டார்.

சங்கத்தின் செயலாளர் சிங்கிலேயர் பீற்றர், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கும், மலசலகூட பயனாளிகளுக்கும் நானாட்டான், முருங்கன், மன்னார்ப் பகுதிகளில் விவசாய சுகாதார பயிற்சி வகுப்புக்களை நடத்தினார்.

இவ்வருடம் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி அவர் எடுத்து விளக்குகையில் ம.து.ம.ச. விவசாய உதவித் திட்டத்தின் கீழ் 99/2000 கால போகத்தில் 5 000 மரக்கன்றுகள் மலிவு விலையில் விவசாயத் திணைக்களம் மூலம் மன்னார் அரசாங்க அதிபரின் உதவியுடன் சகல விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் நிதி உதவியுடன் 300 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு (விதவை, கைது காணாமற்போனோர்) வறுமை, இடம்பெயர்வு, 1 ஏக்கருக்கு நெற்செய்கைக்கு உள்ளீடுகள் வழங்கப்படுகின்றன இவர்கள் அறுவடையின் பின் அடுத்த போகத்துக்கு விதை நெல்லாக 6 புசல் வைத்திருக்க வேண்டும். தமது குடும்ப உணவுக்காக 15 புசல் வைத்துக் கொண்டு மிகுதியை விற்று தமது குடும்பத்தைப் பராமரிக்க வேண்டும். ம.து.ம.ச. சுழற்சிக் கடன் திட்டத்திற்கு பணம் செலுத்த வேண்டும் — என்றார்.

நெதர்லாந்து சுழற்சி நிவாரண நிதியிலிருந்து 100 பாதிக்கப்பட்ட சிறிய வீட்டுத்தோட்டக் காணி உள்ளவர்களுக்கு ¼ ஏக்கர் வீதம் போசாக்குணவுப் பயிர்களை மேற்கொள்ள தலா 5,000/- வீதம் இலகு கடன் உதவி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

''கனேடிய உயர் ஸ்தானிகர்'' உதவியுடன் 200 மலசல கூடங்கள் கட்டும் வேலைகள் முருங்கன், நானாட்டான், உயிலங்குளம், அரிப்பு போன்ற பிரதேசங்களில் நடைபெற்று வருவதாகவும் 60 சதவீத வேலைகள் முடிந்துள்ளதாகவும் பயனாளிகள் தமது இல்லம் போன்று மலசலகூடத்தை சுத்தமாகபேண வேண்டும் என்றும் யுனிசெவ் ஸ்தாபனத்திடம் மேலும் 500 குடும்பங்களுக்கு உதவி கோரி உள்ளதாகவும் அவை கிடைக்கும் பட்சத்தில் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 20 கிராமங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வி உதவித் திட்டத்தின் கீழ் பாடசாலையை விட்ட யுவதிகளுக்கான தையற் பயிற்சி மன்னார், நானாட்டான், மாந்தைமேற்கு உ.அ.அ. பிரிவில் நடைபெறுவதாகவும் இதில் 70 பிள்ளைகள் பயன் பெறுவதாகவும் —

கணனி பயிற்சி மன்னாரில் அரச ஊழியர்களுக்கும் பாடசாலையை விட்டவர்களுக்கும் 3 பயிற்சிகள் அளிக்கப்படுவதாகவும் இதில் 90 பேர் பயனடைவதாகவும் —

ஆங்கில மேலதிக வகுப்புகள் மன்னாரில் நடைபெறுவதாகவும் இதில் 30 பேர்பயன் அடைந்துள்ளதாகவும். —

வருடாந்தம் 5 வறிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய உதவி வழங்கப்படுவதாகவும் தற்போது 25 மாணவர்கள் கல்வி உதவி பெறுவதாகவும் —

2000 வறிய மாணவர்களுக்கான பாட உபகரணங்கள் வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

இதே போன்று மீனவர்களுக்கு நோர்வே நாட்டு நிதி உதவி மூலம் வலை, வள்ளம், இயந்திரம், கட்டுமரம் போன்றன 3 குடும்பங்களைக் கொண்ட குழு அடிப்படையில் சிறுத்தோப்பு, தலைமன்னார், ஸ்ரேசன், பாப்பாமோட்டை போன்ற இடங்களில் பலருக்கு வழங்கப்பட்டதாகவும் —

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக மன்னார் மக்கள் இச்சங்கம் மூலமாக பணம், உணவு, உடை முதலியவற்றைத் தந்துதவுமாறும் கோரிக்கைவிடுத்தார்.

இந்தச் சங்கம் 1985 ஆம் ஆண்டு மன்னார்மக்களால் ஆரம்பிக்கப்பட்டதாகவும் 2000 ஆம் ஆண்டில் 15 வருடத்தை மக்கள் சேவையில் பூர்த்தி செய்ய உள்ளதாகவும் மேலும் பலர் இச்சங்கத்தில் சேர்ந்து தொண்டுகள் செய்ய முன்வருமாறும் அறைகூவல் விடுத்தார். (இ)

# தனியார் வியாபார முகாமைத்துவம் பாடசாலை மாணவர்களுக்குபயிற்சி

யாழ். மாவட்ட மாணவ முயற்சியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு 14-11-99 அன்று யாழ். றோட்டறிக் கழகத்தினால் மகளிர் அபிவிருத்தி நிலைய ஆதரவில் நடைபெற உள்ளது.

இது தொடர்பான யாழ். றோட்டறிக் கழகத்தின் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

முயற்சியாண்மை பற்றி தப்பான பல அபிப்பிராயங்கள் மக்களிடையே நிலவுகின்றன. பணம் மட்டும் சம்பாதிப்பது நோக்கமெனில் அது கறுப்புச்சந்தை வியாபாரிகளின் செயற்பாடே அல்லாது முயற்சியாளர்களின் குறிக்கோளல்ல.

ஒரு முயற்சியாளர் (Entrepreneur) சமூகத்திற்கும் நாட்டுக்கும் சேவையாற்றுகின்றார் வேலை தேடுவோருக்கு வேலை வழங்குகின்றார். நாட்டின் செல்வத்தினைப் பெருக்கும் வகையில் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்.

தனியார் முயற்சி,வணிகம், பொருளியல் ஆகியவற்றின் பெறுமதியினை இளம் சமூகத்தினருக்கு உணரவைக்கும் நோக்குடன் ''யாழ். மாணவ முயற்சியாளர் தெரிவு'' எனும் செயற்றிட்டம் யாழ். றோட்டறிக் கழகத்தினால் உருவாக்கப்பட்டது. இத் திட்டம் 'Junior Achievement'' எனும் நிறுவனத்தின் வணிக, பொருளியல் கல்வி புகட்டப்படும் பாங்கினைத் தழுவியது ஆகும். இந்நிறுவனம் தனது செயற்பாட்டினை 106 நாடுகளில் வருடத்தில் 30 லட்சம் மாணவர்கள் பயன் பெறக்கூடிய வகையில் பரந்து திகழ்கின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் உயர் கல்வி மாணவர்கள் பொருளியல், வணிகம் ஆகிய கற்கைநெறிகளில் செய்முறை சார்ந்த அனுபவங்களைப்பெறும்வகையிலும் தனியார் வர்த்தகத் துறைக்குரிய செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் வகையிலும் யாழ். றோட்டறிக் கழகத்தினால் சென்ற மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டதே இத்தேர்வு ஆகும்.

### வேலை வாய்ப்பு


எமது இளைஞர்களுக்கு வரும் காலங்களில் தனியார் துறையில் தான் வேலை வாய்ப்புக்கள் அதிகம். ஆனால் எமது கல்வி முறைமை தனியார் துறை வேலைவாய்ப்புக்குகந்ததாக அமையவில்லை. மாணவர்களுக்கு இத்துறையில் ஒரு நாட்டத்தினையும் அதேவேளை இத்துறையில் எதிர்நோக்க வேண்டிய சவால்களுக்கு முகங்கொடுத்து, இத்துறையில் உருவாகக்கூடிய சந்தர்ப்பங்களை பயன்படுத்தவும் இச் செயற்றிட்டம் உதவும்.

மேலும் இத்திட்டத்தின் மூலம் தன்நம்பிக்கை தொழில் ஈடுபாடு, விபத்துக்கு முகங்கொடுத்தல் (Risk Taking), தலைமைத்துவம், ஆக்கத்திறன், எதிர்வு கூறல், தகவல் தேடுதல், தொடர்ச்சியாக செயற்படும் ஆற்றல், பிறரைக் கவரும் தன்மை, நேர முகாமைத்துவம், பின்னூட்டல் போன்ற முகாமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்.

### பாடசாலை கம்பனி

யாழ். றோட்டறிக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைக் கம்பனி செயற்

( 8 ஆம் பக்கம் பார்க்க)



## சாயி சிந்தனை

ஜெபம், தபம் போன்ற ஆன்மீக சாதனைகள் எல்லாம் புலன்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் எந்தப் பயனையும் தராது. நீங்கள் வேண்டுமானால், மனிதனாகப் பிறந்தவனால் புலன்களை அடக்குவது என்பது சாத்தியமானதில்லை என நினைத்துக் கொண்டிருக்கலாம். இங்கு அடக்குவது என்பது முழுமையும் செயலற்று இருப்பது என்பதல்ல. உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். ஆனால் எதைச் செய்தாலும், இறைவனைத் திருப்திப்படுத்த என்ற எண்ணத்துடன் செய்யுங்கள். (ஸர்வ கர்ம பகவத் ப்ரீத் யார்த்தம்) இந்த உணர்வை வளர்த்துக்கொண்டால் உங்கள் புலன்கள் எல்லாம் தானகவே கட்டுக்குள் வந்துவிடும்.

(ஆதாரம்: சனாதனசாரதி)

## நாளை

ஐப்பசி 26

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தி

மாலை 5. 27வரை

நட்சத்திரம் மூலம்

பிற்பகல் 4 56வரை

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 6.06 — 7 36

ராகுகாலம்: 10 36 12 06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உண்மையைக் கண்டவர்கள் புகழ் என்னும் உயர்ந்த குன்றின் மீது வைக்கப்படுவர்.

- இங்கர்சால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று உண்ணாவிரதம் மேற்கொள்ளும்

# யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள்

கொழும்பு, நவ. 11

யாழ். மாநகரசபை பிரதி மேயர் தலைமையில் மாநகர சபை உறுப்பினர்கள் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து உள்ளூராட்சி, மகாண சபைகள் அமைச்சு அலுவலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை இன்று நடத்தவிருக்கின்றனர்.

இன்று காலை 8 மணி முதல் இடம்பெறும் இந்தப் போராட்டம் மாலை வரை இடம்பெறும் என்றும் —

இந்தப் போராட்டத்தால் பயன் கிடைக்காது விட்டால் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்கப் போவதாகவும் — கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

போராட்டத்துக்கு முன்வைத்துள்ள காரணங்கள் வருமாறு:

★ மறைந்தமுன்னாள் முதல்வர்களுக்கு ஜனாதிபதி உறுதியளித்தபடி 3கோடி ரூபா வழங்கப்படல்.

★ சிதைந்தநிலையிலிருக்கும் புதிய சந்தைக் கட்டடத்தையும் முற்றாக அழிக்கப்பட்ட மாநகரசபைக் கட்டடத்தையும் புனரமைக்க நடவடிக்கை எடுத்தல்.

★ வீதிகள், கால்வாய்கள் மதகுகள் போன்றன புனருத்தாரணம் செய்வதற்கு 2 கோடி 50 லட்சம் ரூபா தேவை. பல தடவைகள் இது குறித்து கோரிக்கைகள் விடப்பட்டிருந்தும் இதுவரை எந்த விதமான சாதகமான பதில்களும் தரப்படவில்லை.

★ சுப்பிரமணியம் பூங்கா திருத்தியமைக்கப்படல்.

★ மறைந்த முதல்வர்களுக்கும் - கடமையின் போது உயிரிழந்த மாநகரசபை ஊழியர்களுக்கும் இன்றுவரை நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

★ மாநகரசபைக்கென ஒரு வாகன வசதியும் கிடையாது. கடந்த ஒன்றரை வருடகாலத்துக்கு மேலாக பல தடவைகள் கோரிக்கைகள் விடப்பட்டிருந்தபோதிலும் யாழ். மாநகரசபை புறக்கணிக்கப்பட்டு வருகிறது. 7 பிரதேசசபைகளுக்கு கடந்த 2 மாதங்களுக்குள் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் முக்கிய உள்ளூராட்சி சபையான யாழ். மாநகரசபை திட்டமிடப்பட்டே புறக்கணிகப்படுகிறது.

★ போதியளவு ஊழியர் இல்லாமை. [இ-3]

## வாய்ச்சுகாதார தினம்

யாழ்ப்பாணம், நவ. 11

தேசிய வாய்ச் சுகாதார தினம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9மணிக்கு வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கருத்தரங்குக்கு பொருத்தமான ஆசிரியர்களை பங்குபற்ற அனுப்புமாறு தீவக வலயப் பொது நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். ராதாகிருஷ்ணன் அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கருத்தரங்கில் சுகாதார வைத்தியஅதிகாரியின் ஆரம்ப உரையும், வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அவர்களின் விசேட கருத்துரையும் இடம்பெற உள்ளது. (இ-8)

## விஞ்ஞான கூடம்

நெல்லியடி, நவ. 11

நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் 8 லட்சம் ரூபா செலவில் புதிய விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த வேலை அடுத்த மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அனுசரணையில் அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையில் 5 லட்சம் ரூபா செலவிலும், கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 5 லட்சம் ரூபா செலவிலும் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-109)

## வாசகர் திருமுகம்

### வாழைப்பழச் செய்கையாளருக்கு இனிப்பான செய்தி

'உதயன்' பத்திரிகையில் கொழும்பிற்கு வாழைப் பழம் அனுப்புவதற்கு யாழ் அரச அதிபர் அவர்கள் கோப்பாய் பிரதேச செயலரிடம் கேட்டுள்ளதாகவும். கோப்பாய் வடமத்திய விவசாய சம்மேளனம் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளதாகவும் அறிந்து வாழைப்பயிர்ச் செய்கையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

குடாநாட்டில் வாழைப்பழச் செய்கையாளர்கள் பலர் நஷ்டமடைந்து வாழைத்தோட்டங்களை அழிய விட்டுள்ளனர். அரச அதிபரின் முயற்சி தொடர்ந்தும் செயற்படுமானால் பல ஏழை விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும். இப்பணிக்கு இது விடயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் தமது பங்களிப்பைப் பூரணமாகச் செய்ய வேண்டுமென இப் பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். நாட்டிற்கு நயம் தரும் இதுபோன்ற முயற்சிகள் பெருக வேண்டும். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

இ. த கோபால்

'ஹரி ஓம்',
உரும்பிராய்.

## கப்பல்களுக்கு பொருள்கள் ஏற்றும் லொறிகளின் பதிவு

உதயன் 20—09—99 ஆம் திகதிய இதழில் 'மாற்று வழி இல்லையா?' என்ற தலைப்பில் வெளியான வாசகர் திருமுகம் பகுதியில் வெளியான கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து சில விளக்கங்களை அளிக்க விரும்புகின்றோம்.

பல விதிமுறைகளைக் கொண்டு ஒரு ஸ்தாபனத்தை இயக்கினாலும் அதனை மீறிச்செயற்படுபவர்களை தடுப்பது என்பது முயற்கொம்பாக மாறி வருகிறது. காரணம் சுயநலமே இன்று எல்லோரிடமும் காணப்படுகிறது. அதுவும் வீதிவழி மூடப்பட்டதால் ''போர்க்கால முதலைகள்'' ஏரானம்.

இச்சங்கம் அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதே லொறி உரிமையாளர்களுக்கு ஒரு நியாயமான தொழில் வாய்ப்பை அளிப்பதற்கே. புனர்வாழ்வுப் பகுதியின் தயவில்தான் இத்தொழில் சிறப்பாக நடக்கிறது. அவர்களும் தனியார் வாகனங்களைச் சேவைக்கமர்த்தினால் நாங்கள் நிச்சயம் பாதிப்புறுவோம். நல்ல வேளையாகத் தற்போது இருதுறைமுகங்களும் பாதுகாப்புப்பகுதியில் அமைந்திருப்பதனால் பல வெளியில் கூற முடியாத காரணங்களினால் இச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு லாபகரமாக அமைந்திருக்கிறது.

முக்கியமாக உணவுப் பொருள் வாகன அணியில் பதிந்து செல்லும் லொறிகள் எக்காரணம் கொண்டும் பிறவேலைகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அணியில் பதிவு பெற்றுவிட்டால் சகல நடவடிக்கையும் பாதுகாப்புக் காவலர்களின் கட்டுப்பாட்டிற்குள் நடைபெறுவதே அதற்குக் காரணம். இதனால் ஒருசிலலொறிகள் பதிவுக்கு வராமலே பிறவேலைக்கு கூடிய கூலிக்குச் செல்லுகிறார்கள். எனவே அப்படிச் செல்பவர்கள் மீண்டும் அணிக்கு பதிய வரும் போது வெற்றுவாகனமாகவே வரவேண்டும். காரணம் என்னவென்றால் கூடியகூலிக்குச்சென்றதுமல்லாமல் வாகன அணிச் சேவைக்குப் பதிவு பெற்றவர்களை முந்திச் சென்று சம்பாதிக்கும் எண்ணந்தான்.

இதன் காரணமாகவே வாகனத்தேவை ஏற்படும் போது சங்கததை நாடுங்கள் என்று நாம் எல்லோருக்கும் கூறிவருகிறோம். ஆனால் பலர் அதனைச் செய்யாது தனிப்பட்ட முறையில் வாகனங்களை அமர்த்திப் பிரச்சினைப்படுகின்றார்கள். சங்கத்தினூடாக வாகனங்களை அமர்த்தினால் பகுதி பகுதியாகப் பணத்தைச் செலுத்த முடியாது சில சந்தர்ப்பங்களில் வெளியாருக்குக் கூலியேகிடைப்பதில்லை. இதில்பல கோளாறுகள். எனவேதான் நாம் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு சற்றுப் பிசகினாலும் தொல்லைகள் பூதாகாரமாகிவிடும். இது போன்றவற்றினால் நாங்கள் இப்படியான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

பொது முகாமையாளர்
யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி
உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்
யாழ்ப்பாணம்.

## சிறுதொழில் செய்வதற்கு ப.நோ.கூ.ச. மூலம் கடன்

சுழிபுரம், நவ. 11

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கிளைகள் மூலமாக சிறுதொழில் செய்பவர்களுக்கு கடன் அடிப்படையில் ரூபா பத்தாயிரம் வழங்குவதற்காக அங்கத்தவர்களிடம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர். இந்தக் கடன் திட்டம் இரு பிணைகளுடன் கூடியதாகவும், ஒரு வருட எல்லையைக் கொண்டதாகவும் உடையது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வருடம் நெற்செய்கையாளர்களுக்கு வழங்கிய கடன் பணத்தின் முழுத் தொகையையும் உரிய காலத்தில் மீளப்பெற்று இந்தச் சங்கம் சாதனை படைத்துள்ளது. (இ-8-28)

## வீட்டுத் தோட்டச் செய்கைக்கு மரக்கறி விதைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 11

வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு யாழ் மாவட்டத்தில் 280 வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 20 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு விவசாயத் திணைக்களத்தினால் இந்த விதை பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு, மேல்நாட்டு மரக்கறி விதைகளுடன் பப்பாசி, எலுமிச்சை நாற்றுக்கள் ஆகியவையும் இந்தப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை தெரிவித்தார்.

பிரதேச செயலர் மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மேற்படி பயனாளிகளுக்கு மாதிரி வீட்டுத் தோட்டச் செய்கை பற்றிய பயிற்சிகளும் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-5)

## கருத்தரங்கு

யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் கருத்தரங்குத் தொடரின் மூன்றாவது பிரிவு அமர்வு நாளை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'தானிய விதைகளில் அரசியல்' என்னும் பொருளில் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் உரையாற்றுவார். [க-5]

## தனியார் வியாபார...

(ஏழாம் பக்கத் தொடர்)

திட்டத்தில் பதினொரு பாடசலைகளைச்சேர்ந்த 350 மாணவர்கள் பங்குபற்றினர். பாடசாலைக் கம்பனி ஒவ்வொன்றும் அக்கம்பனி உருவாக்கத்தில் நியமனமான கம்பனி பின்பற்றவேண்டிய வணிக முகாமைத்துவ நடைமுறைகளைமுற்றாகக் கடைப்பிடித்தது.

முதலில் பாடசாலை ஒன்றில் கம்பனி அமைப்பதற்கு ஆர்வம் காட்டிய ஏறத்தாழ 30 மாணவர்கள் ஒரு குழுவாகக் கூடி வணிகத்தின்தன்மை, ஆரம்பமுதலீடு போன்றவற்றைத் தீர்மானித்தனர். இக்குழு பங்குகளை விற்று, முதலீட்டினைப் பெற்று, இயக்குநர் சபையினைத் தெரிவு செய்து, தங்களுக்கென உபவிதிகளை உருவாக்கி கம்பனிக்கும் பெயரிட்டு. யாழ். றோட்டறிக் கழகத்தில் பதிவு செய்தனர்.

இவர்கள் வழமையான கம்பனி நடைமுறைகளுக்கமைய கம்பனிக் கூட்டங்களையும் இயக்குநர் சபைக் கூட்டங்களையும் நடத்தித் தீர்மானங்களை எடுத்து, கம்பனிகளை நான்கு மாத காலத்திற்கு இயக்கி பின்பு அக்கால முடிவில் கம்பனியைக் கலைத்து, இலாபத்தைக்கணித்து, பங்குதாரருக்குப் பங்கு வீதத்தினையும் செலுத்தி இறுதிஅறிக்கையினையும் வெளியிட்டனர்.

இக்கம்பனிகள் வர்த்தகம், உற்பத்தி, விற்பனை, சேவை போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டன. இக்கம்பனிகள் மிகவும் சுவையான பெயர்களைத் தேர்ந்தெடுத்திருந்தன.

பாடசாலைகளும் அவற்றில் உருவாக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களும்:-

சோமஸ்கந்தா கல்லூரி — சோமஸ்கந்தன் கம்பனி, வைத்தீஸ்வரா கல்லூரி — இந்துஸ்பதி கம்பனி, யாழ். இந்துமகளிர் கல்லூரி— இந்துமங்கை, கொக்குவில் இந்துக் கல்லூரி — வலம்புரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி— கிறிஸ்தா கம்பனி, உரும்பிராய் இந்துக் கல்லூரி — நலன்புரி விற்பனை நிலையம், கனகரத்தினம் ம.ம வி. — ஸ்ரான்லி கம்பனி, மானிப்பாய் இந்துக் கல்லூரி — ஒளிநிலா, வேம்படி மகளிர் கல்லூரி — திறிஸ்ரார். வயாவிளான் ம. ம. வி. — உற்பத்தி வியாபார கம்பனி, இராமநாதன் கல்லூரி — வெண்நிலா.

வலம்புரிக் கம்பனி முகாமை இயக்குநர் செல்வி என். சுகந்தி கூறியதாவது:-

வர்த்தக வகுப்பில் பலதையும் கற்றோம். ஆனால் இக் கம்பனி மூலம் பெற்ற அனுபவம்தான் கற்றவற்றைப் பூரணமாக விளங்குவதற்கு உதவியது. தொழில் முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை நடைமுறையில் அறிந்து கொண்டேன். மேலும் வர்த்தக முகாமைத்துவத் திறன்களான தீர்மானமெடுத்தல், வியாபார விஸ்தரிப்பு முறை, பிரச்சினை தீர்த்தல், கூட்டம் நடத்தல் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் ஆற்றல், எதிர்காலத்துக்கான திட்டமிடல், கொள்வனவு, விலையிடல், நல்லெண்ணத்தை வளர்த்தல், வணிகம் சம்பந்தமான தயக்கம் நீக்கல், போட்டியாளர் பற்றிய தயவல், வியாபாரக் குறியீடு போன்ற பல திறமையினை வளர்க்கவும் அல்லது புதிய அனுபவத்தினைப் பெறுவதற்கும் இக்கம்பனி அனுபவம் உதவியாகக் காணப்பட்டது — என்றார்.

ஒளிநிலா கம்பனித் தலைவர் செல்வன் பூ. நந்தகுமார் கூறியதாவது:-

கம்பனி சம்பந்தமான நடைமுறை அறிவு எனக்குக் கிடைத்தது. வர்த்தக முகாமைத்துவத்துக்கு அவசியமான துணிவு, பொருள்கய கொள்வனவு, சலுகைகளைப் பெறல், போட்டிக்கு முகங்கொடுத்தல். நுகர்வோரைக் கவர்தல், கலந்துரையாடும் திறன் போன்ற திறன்களை விருத்தி செய்ததோடு ஒரு சுயதொழில் முயற்சியில் ஈடுபடக்கூடிய துணிவினையும் பெற்றுள்ளேன்.

இந்தப் பேட்டிகளை நோக்கும் பொழுது றோட்டறிக்கழகத்தின் இச் செயற்றிட்டம் குறித்த நோக்கத்தினை அடைந்துள்ளதாகக் கொள்ளலாம். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய - நியூஸிலாந்து அணிகள்

## பங்குபற்றும் 3 ஆவது ஒருநாள் ஆட்டம்

புதுடில்லி, நவ. 11

இந்திய — நியூஸிலாந்து அணிகளுக்கு இடையேயான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் ஆரம்ப பந்துவீச்சாளர்களான ஜவகர் சிறிநாத், வெங்கடேஷ் பிரசாத் ஆகியோர் விளையாடமாட்டார்கள்

இவர்களுக்குப் பதிலாக உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறப்பாக விளையாடாததாலும் முதுகுவலி காரணமாகவும் சிறிதுகாலம் அணியில் இடம்பெறாத அஜித் அகார்கரும் புதிய தமிழ்நாட்டு வீரர் திருநாவுக்கரசு குமரனும் இன்றைய ஆட்டத்தில் விளையாடுவார்கள்.

துடுப்பாட்டக்காரர் சடகோபன் ரமேஷுக்குப் பதிலாக டெவன் காந்தியும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அடுத்ததாக இந்திய அணி பங்குபற்றவுள்ள ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்காகவே சிறிநாத், பிரசாத் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது

(இ-4)

### தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

## சம்பளத்திட்டம், உள்ளீர்ப்பு பற்றிய விளக்கக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 11

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வெளிவந்த புதிய இலங்கை ஆசிரியர் சேவை சம்பளத்திட்டம், உள்ளீர்ப்பு தொடர்பான விளக்கக் கூட்டங்கள் இன்று முதல் பல இடங்களில நடைபெறவிருக்கின்றன.

ஆசிரியர்கள் தமதுவசதிக்கு ஏற்ற வகையில் விரும்பிய இடங்களில் விளக்கக் கூட்டங்களில் பங்குபற்றலாம் எனச் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

கூட்டம் நடைபெறும் திகதியும் இடமும் வருமாறு:-

இன்று — வேலணை சரஸ்வதி வித்தி

15-11-99 — யாழ். இந்து.

16-11-99 — சங்கானை சிவப்பிரகாசம வித்தி.

18-11-99 — புத்தூர் சோமஸ்கந்தா.

19-11-99 — சாவகச்சேரி இந்து.

23-11-99 — பருத்தித்துறை வேலாயுதம் ம.வி.

25-11-99 — மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி.

(இ-3)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 11

அரியாலை மத்தி இளைஞர் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.00 மணிக்கு— கொட்டடி வி. க. 'ஏ' அணி எதிர் சென்றலைற்ஸ் 'ப்ளூஸ்' வி க.

★ மாலை 4.30 மணிக்கு— நல்லூர் ஐ. வி க. எதிர் கோப்பாய் ஐ.வி.க.

(இ-8)

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், நவ. 11

நேற்று காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 75 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 59 பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை —

இன்று காங்கேசன்துறைக்கு வருகின்ற லங்கா முடித்த கப்பலில் குடாநாட்டுக்கான 542 தபால்பொதிகள் எடுத்துவரப் படுவதாகவும் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

[க-10]

## பரிசோதனை குழாய்க் குழந்தை

கொழும்பு, நவ. 11

இலங்கையில் முதலாவது பரிசோதனைக் குழாய் குழந்தை நேற்றுப் பிறந்துள்ளது.

பம்பலப்பிட்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று முற்பகல் 10.11 மணிக்குப் பிறந்த இந்தக் குழந்தையின் நிறை சுமார் மூன்று கிலோ ஆகும்.

திருமதி சிவராசா என்பவர் இந்தக் குழந்தையின் தாயார் ஆவார்.

டாக்டர் வி. அருளானந்தராஜா, டாக்டர் பத்திராஜா ஆகியோர் 15 நிமிட சத்திர சிகிச்சைக்குப் பின்னர் மகப்பேற்றை நிறைவேற்றினர்.

தாயும், சேயும் நலமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-க-3)

## தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிகள் ஊடாக கடன் உதவி

யாழ்ப்பாணம், நவ 11

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் நடத்தப்பட்ட தொழில்துறை மாற்றுப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வங்கிகள் ஊடாக கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டவர்களில் தொழில் முயற்சியை ஆரம்பிக்கவுள்ளவர்களுக்கு மட்டுமே இக் கடனுதவிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கொழும்புத் தலைமையகத்திலிருந்து கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயிற்சியாளர்கள் குழு ஒன்று பேக்கறி உற்பத்தி, உணவுப் பொருள் தயாரிப்பு, பழம் பதனிடுதல், துணிகளுக்கு வர்ணம் தீட்டுதல், தும்புத் தொழில் உற்பத்தி போன்ற துறைகளில் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகளை வழங்கியது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடைபெற்ற இந்தப் பயிற்சிகளில் 450 இளைஞர் யுவதிகள் பங்குபற்றினார்கள்.

இந்தப் பயிற்சி நெறி தற்பொழுது பூர்த்தியடைந்துள்ளதால் பயிற்சி பெற்ற பலர் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(க-5)

## நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வுகள் முன்னர் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறமாட்டாது என்றும்—

இவை எதிர்வரும் 17 ஆம் திகதி வலயம் ஒன்று கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்றும் —

வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

[இ-9]

வடகோப்பாய்

## சிறி சபாபதி நாவலர் விளையாட்டுக் கழகம் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 0228 இரண்டாம் பரிசு இல 0364
மூன்றாம் பரிசு இல. 1462

ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்
0098, 1014, 1457, 0399, 0793,
0430, 0099, 0186, 1520, 1559.

மேற்படி பரிசு இலக்கங்களுக்குரியவர்கள் சீட்டுக்களைச் சமர்ப்பித்து 21-11-99 அன்று கோப்பாய் வடக்கு, சிறி சபாபதி நாவலர் ச. ச. நிலையத்தில் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆதரவுக்கு நன்றிகள்

சி. ச. நா. வி. கழகத்தினர்.

கோப்பாய். (70886)

## நீங்காத நினைவினிலே எங்கள் அப்பாவின் 60 ஆவது பிறந்த நாளின் நினைவலைகள்

மலர்வு: 11 — 11 — 1939



உதிர்வு: 28 — 08 — 1998

### பொன்னையா தியாகராசா

அன்புள்ள அப்பா! வணக்கம்.
உங்கள் அரவணைப்பு - மீண்டும் வேண்டும் எமக்கும்
ஆண்டு ஒன்றில் பல நாள்களப்பா - ஆனால்
எமது வாழ்வில் பொன்னாள்
இந்த இனிய நாளே தான்
எம்மை உலகிற்கு அளித்த உத்தமரே!
நீங்கள் உதயமாகிய இன்றைய நாளே தான்
கடந்து வந்த காலங்களில் நீங்களும்
எம்முடன் சேர்ந்து களிப்படைந்த
இன்றைய நாள்!
இன்று நிழலாகி நிற்கின்றது!
ஆயிரம் முகங்கள் மத்தியிலும்
தேடுகின்றோம் உங்கள் முகம்
தேற்றினாலும் தேறிடாது
எங்கள் மனம்
உவகை கொண்ட எங்கள் மனம் தேடுதப்பா
உங்கள் முகம்
தேடினாலும் காண்போமோ? - அப்பா
உங்களது இனிய முகம்
உங்கள் அன்பு மனைவியும்
அருமைக் குழந்தைகளும்
கூறி நிற்கும்
இனிய பிறந்த நாள் வாழ்த்து அது!
காற்றோடு சங்கமமாகிடவே
எங்கள் இதயங்கள் அழுதிடும் ஒலியோடு
எம் - கண்ணீர்ப் பூக்களதை - உங்கள்
பாதமதில் காணிக்கை ஆக்குகின்றோம்.

— மனைவி, பிள்ளைகள்.

புஷ்பா ஸ்ரோர்ஸ்,
192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(70905)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசரத்தினம் ஜீவராணி

(வவா)

பிறவுண்றோட் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் ஜீவராணி நேற்று (10-11-99) புதன்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
சோ. இராசரத்தினம் (கணவர்)
இ. விஜேயசர் (மகன்)
சோ. சிவராசா (மைத்துனர்)
(மெக்கானிக்)

37/6, பிரப்படி லேன்'
கொக்குவில்.

(70906)

### திருமதி ஆறுமுகம் விசாலாட்சி

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ். சிவன் கோயில் வடக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் விசாலாட்சி 10-11-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதி—வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் மனைவியும் தர்மலிங்கம், தெய்வேந்திரம், கந்தசாமி, இராசேந்திரம், தையல்நாயகி, சற்குணம் [யாழ் மரக்கறி மாக்கற்], வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை, வைத்திலிங்கம் ஆகியோரின் சகோதரியும் குமாரசாமி, சவுந்தரம், இராசம்மா, சின்னத்துரை [திருநெல்வேலி மரக்கறி மாக்கற்], பாலசிங்கம், சின்னம்மா, மகேந்திரம் [திருநெல்வேலி மாக்கற்] ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11-11-99 மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. கந்தசாமி
[மகன்]

86A, சிவன் கோயில்
வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[70907]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

உண்மைநிலைமை அதுஅல்ல கூடுதலானோர் உயிரிழந்துள்ளனர். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட 407 சடலங்கள் ஏற்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வெலிஓயாவில் (மணலாறு) கஜபாபுர, ஜானகபுர ஆகிய இடங்களில் இருந்து 10 ஆயிரம் மக்கள் வெளியேறி உள்ளனர்.

இப்படி ஜெயலத் தெரிவித்தார்.

(இ-7-6)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

டது.

நகரை விட்டு வெளியேறும் பொதுமக்கள் மடு, ஆசிக்குளம், இராஜேந்திரக்குளம் ஆகிய பகுதிகளை நோக்கியும் தெற்கு நோக்கியும் இடம் பெயர்ந்து வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றிரவு வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட ரயிலில் வழமைக்கு மாறாகப் பெரும் எண்ணிக்கையானோர் பயணம் செய்ததாக ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இரவு 9-15 மணிக்குப் புறப்படும் ரயில் பயணிகளின் எண்ணிக்கை அதிகமானதால் அவர்களது சோதனைகள் முடிந்து புறப்படுவதற்கு 10-45 மணியானதாகக் கூறப்பட்டது.

அதே சமயம் வவுனியா மீது தாக்குதல்களை நடத்தப் போவதாக விடுதலைப் புலிகள் தமது வானொலியில் அறிவித்திருப்பது மக்களின் நாளாந்த வாழ்க்கையைக் குழப்புவதற்கே என்று வன்னிப் பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பொதுமக்களுக்குரிய சகல பாதுகாப்புக்களையும் வழங்க இராணுவத்தினரும் பொலீஸாரும் தயாராகவிருக்கின்றனர் என்றும் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

(இ-3-21-164-8-7-6)


யாழ்ப்பாணத்திலிருந்து
திருகோணமலைக்கு அல்லது கொழும்புக்கு
வெங்காயம், புகையிலை, கடல் உணவு
என்பவற்றை
ஹெந்தளை கப்பலில் அனுப்ப விரும்புபவர்கள்
தொடர்பு கொள்ளவும்.

ஜெசீபாஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:
13 - 11 - 1999 இல் கப்பலில் பொருள்கள் ஏற்ற இருப்பதால் உடன் தொடர்புகொள்ளவும்.
[சி/9787]


## 98 அதிகப்படி...

(முதலாம் பக்கத் தொடர்)

ழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களும் வாசுதேவ நாணயக்காரவும் பிரேரணைக்கு எதிராகவும் வாக்களித்தனர்.

ஐ. தே. கட்சி உறுப்பினர்கள் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தின் போது நாடாளுமன்றில் சமுகமளித்திருந்தபோதிலும் வாக்கெடுப்பின் போது அங்கு இருக்கவில்லை.

இதேவேளை ஐ. தே. கட்சியில் இருந்து விலகி அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமுகமளிக்கவில்லை. (இ-7)

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

சர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை முன்வைத்து உரையாற்றினார்.

கடந்த சில நாள்களுக்குள் பாரதூரமான சில சம்பவங்கள் நடைபெற்றமை காரணமாக வன்னிப் பிரதேசத்தின் நிலையை அறிந்து கொள்வதற்கென நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவலுடன் இருப்பது இயல்பே என அமைச்சர் கூறியபோது சபையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கூச்சல் எழுந்தது.

எனினும் பலத்த கூச்சல்களின் மத்தியிலும் அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றினார்.

(இ-7)

## துப்பாக்கிச்..

(முதலாம் பக்கத் தொடர்)

உறவினர் வீடொன்றில் நடைபெறவிருந்த பூப்புனித நீராட்டு விழா ஒன்றுக்குச் சென்ற வேளையே மறைந்திருந்த சிலர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7-21)

## சமாதானத்துக்கான..,

(முதலாம் பக்கத் தொடர்)

நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தோல்வி கண்டுள்ளது.

படையினர் தொடர்ச்சியான போரினால் சோர்வடைந்துள்ளனர். அத்துடன் தமது நிலைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்களிடம் போதுமான படைப்பலமும் இருக்கவில்லை.

இராணுவ வெற்றிக்கு இடமில்லை என்பது வெளிப்படை. ஆகையால் விடுதலைப் புலிகளும் இதனை உணர்ந்து பேச்சுவார்த்தைகளுக்கு முன்வந்து பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்க்க முன்வரவேண்டும்.

இப்படி ரணில் கூறினார்.

இதேவேளை கொழும்பில் நேற்றைய தினம் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கான மாநாடொன்றை நடத்திய எதிர்க்கட்சித் தலைவர் தாம் ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்க நேரிட்டால் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுவோரை ஆயுதப்படைகளில் இணைத்துக் கொள்வது குறித்து ஆராய விருப்பதாகத் தெரிவித்தார் என இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

(இ-7)


உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்
மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா



நிகழும் பிரமாதி வருடம் ஐப்பசி வெள்ளிக்கிழமை
26 ஆம் நாள் (12-11-1999) அன்று பகல்
8.32 முதல் 9. 02 வரையுள்ள சுப வேளையில்

★ ஸ்ரீ அபிராமி ★
நகைமாளிகை
SRI APRAMI JEWELLERY

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும்
வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

அன்புடன்
நடராசா ஸ்ரீ சுதாகர் (சுந்தர்)
சத்தியா & கோ
22A, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
[70877]

No. 240, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



STP COMPUTER WORLD

The following courses will be commenced on
13 - 11 - 1999 at 9.00 a. m.

DIPLOMA IN MS OFFICE
Modules included in MS Office
Windows 95/98 | MS Access 97/2000
MS Word 97/2000 | MS Power Point 97/2000
MS Excel 97/2000 | MS Outlook 97/2000

VISUAL BASIC 6.0
VISUAL C ++ 6.0

These courses are started on the request of many students.
Competent graduate staff provides lectures and demonstrations.
Practical classes are going on with well prepared assignments.
Enough practical hours are offered.
Limited admissions - select the courses & confirm early.

For further details contact:
STP Computer World
54 A, Palaly Road, Kantharmadam, Jaffna.
T. P. - 021 - 2674
E. Mail: stp com @ slt. lk
(7088)



உ
காரைநகர் - புளியங்குளம்
அருளானந்தப் பிள்ளையார் கோயில்
பாலஸ்தாபன விஞ்ஞாபனம்



விநாயகர் பேரருளை
முற்கொண்டு
நிகழும் பிரமாதி வருஷம்
ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை (14 - 11 - 99)
ஷஷ்டி திதியும் உத்தராடம்
நட்சத்திரமும் கூடிய
காலை 6.00 மணிக்கு
பாலஸ்தாபன அபிஷேகம்,
தீபாராதனை, திருப்பணி வேலை
ஆரம்பிக்க திருவருள் கூடி இருப்பதால் அடியார்கள் தவறாது வருகை தந்து தொண்டுகள் புரிந்து கூடிய விரைவில் ஆலய திருப்பணி நிறைவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுதல் செய்வதுடன் உதவிகள் புரிந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆரம்பக் கிரியைகள்:
ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(12-11-1999) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பாலஸ்தாபன பிரதமகுரு:
நவாலியூர் பிரதிஷ்டா சிரோமணி
சாமி விஸ்வநாதக் குருக்கள்

ஆலய பிரதமகுரு:
பிரம்மஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள்
சிவாகமசாதகமணி வ. இராஜேஸ்வரக் குருக்கள் (சாதகர்)

நாதஸ்வரம்;
அளவையூர் நாதஸ்வர சக்கரவர்த்தி
கலாசூரி N. K. பத்மநாதன் குழுவினர்

திருப்பணி நிர்வாக சபையினர்

காரைநகர், புளியங்குளம்,
அருளானந்தப் பிள்ளையார் தேவஸ்தானம்.
[70871]


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11-11-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org